# அறிவித்தல்

## வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

# வடமத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவை

# பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல் (திறந்த நிலை) – 2021

வடமத்திய மாகாண அரசாங்க சேவையின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2021-08-31ஆம் திகதியாகும் என்பதுடன் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2021 நவம்பர் மாதத்தில் அநுராதபுரம் நகரத்தில் நடாத்தப்படவுள்ளது.

02. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கும் அதிகாரத்தை வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

| | பதவி | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| i. | தொழில்நுட்ப அதிகாரி (மின்சாரம்) iiiஆம் தரம் | - | 03 |
| ii. | தொழில்நுட்ப அதிகாரி (பொறிமுறை) iiiஆம் தரம் | - | 01 |
| iii. | தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) iiiஆம் தரம் | | |
| iv. | தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) பயிலுநர் தரம் (ஒரு வருடம்) | } - | 35 |
| v. | தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) பயிலுநர் தரம் (இரண்டு வருடங்கள்) | } | |

**03. தகைமைகள்:**

3.1 பொதுத் தகைமைகள்

i. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

ii. அனைத்து அபேட்சகர்களும் வடமத்திய மாகாணத்தில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அளவு உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதராகவும் இருத்தல் வேண்டும். அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

iv. ஏதாவது மத குருவானவர் பதவியை வகிக்கும் நபரொருவருக்கு இப்பதவிக்காக விண்ணப்பிக்கும் தகுதி இல்லை.

v. அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரிகள் மேற்படி பதவிக்காக விண்ணப்பித்தால் அவர்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன் ஐந்து வருடகாலம் எந்தவிதமான ஒழுக்காற்று தண்டனைகளையும் பெற்றிருத்தல் கூடாது. அக்காலகட்டத்தின் சகலவிதமான சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

vi. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் 03 வருடங்களுக்குக் குறையாத காலம் வடமத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். **தகைமைகளுடன் கூடிய போதுமான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்களை வடமத்திய மாகாணத்தினுள் தெரிவு செய்ய முடியாது போனால் மட்டும், வடமத்திய மாகாணத்தில் 10 வருட காலம் சேவையாற்றுதல் வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் நாடு முழுவதிலுமான மட்டத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.**

3.2 கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்:

(அ) அனைத்து பதவிகளுக்குமான கல்வித் தகைமைகள்:

1. க.பொ.த. (சா.தரம்)

மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

2. க.பொ.த. (உ.தரம்)

பிரயோகக் கணிதம்/ தூய கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் / பொறியியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் சகிதம் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் விஞ்ஞானம் / கணிதம் / தொழில்நுட்பவியல் எனும் விடயப்பரப்புகளில், ஒரு விடயப்பரப்பில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) தொழில்சார் தகைமைகள்

தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அதிகாரி **iii**ஆம் தரம் (சிவில்/பொறிமுறை/மின்சாரம்)

I. மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

**அல்லது**

II. தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா

**அல்லது**

III. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

**அல்லது**

V. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

VI. தொழிற்றுறைக்குச் சார்பான தேசிய வாழ்தொழில் திறனின் (NVQ 06) 06வது மட்டத் தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

VII. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து, கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பத் தகைமைகள்

**தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) பயிலுனர் தரம் (ஒரு வருடம்)**

I. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவிக்கு இயைபான துறையில் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழை பெற்றிருத்தல். (உதாரணம்: தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (சிவில் / மின்சாரம் / பொறிமுறை)

**அல்லது**

II. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் திட்டமிடுநர் தொடர்பில் ஒரு வருட முழு நேர பயிற்சிக் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று சான்றிதழை பெற்றிருத்தல்

III. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இயைபுடைய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பத்தில் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழை பெற்றிருத்தல்

IV. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து, கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்

## தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) பயிலுநர் தரம் (இரண்டு வருடங்கள்)

**தொழில்நுட்பத் தகைமைகள் தேவையில்லை.**

**குறிப்பு:** மேற்படி 3.2 பிரகாரம் உரிய கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் வடமத்திய மாகாணத்தினுள் இல்லாவிட்டால் மட்டும் 28/2016ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் விதிமுறைகளை ஏற்புடையதாக்கிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**04. சம்பள முறை:**

(அ) தொழில்நுட்பச் சேவை iiiஆம் தரப் பதவிகளுக்கான சம்பளம் 03/2016ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் உரித்தாகும் சம்பள அளவானது சம்பள சங்கேத இல. MN 3 – 2016 அமைய 31,040 – 445x10 – 660x11– 10x730 – 750x10 – 57,550/- ரூபா (மாதாந்தம்) சம்பளம் உரித்தாகும். இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி 7800.00 ரூபா மற்றும் விசேடக் கொடுப்பனவாக 2500.00 ரூபா மாதாந்தம் வழங்கப்படும்.

(ஆ) பயிலுநர் தரத்திற்கு 03/2016ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 27,140.00 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

**05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அதிகாரி **iii**ஆம் தரப் பதவிகளுக்கு (சிவில்/பொறிமுறை/மின்சாரம்)

(அ) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் அவ்வப்போது எடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அவ்வேளையில் அரச சேவை பதவியொன்றில் நிரந்தரமாக்கப்படாதிருந்தால் அவர் மூன்று வருட கால தகுதிகாண் காலத்தின் பின் உரிய வினைத்திறன் தடைதாண்டலின் சித்தியை பூர்த்தி செய்ததன் பின்னர் இயைபுடைய பதவியில் நிரந்தரமாக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடன் கூடிய அதிகாரியானால் அவரது நியமனம் ஒரு வருட கால பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படும்.

(இ) 18/2020 அரச நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் மற்றும் அதற்கு இயைபான சுற்று நிருபத்தின் பிரகாரம் 03 வருட காலத்தினுள் உரிய அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

## தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) பயிலுநர் தரத்திற்கு

(அ) தொழில்நுட்ப அதிகாரி iiiஆம் தரப் பதவிகளுக்கு நியமிப்பதற்கான தகைமையைப் பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 02 பந்தியில் தரப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவதற்கு போதாமல் போகும்போது மிகுதி வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் தகைமையின் பிரகாரம் ஒரு வருடம் அல்லது இரண்டு வருட பயிலுநர் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ஆ) உரிய பயிலும் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைபவர்கள் மட்டும் தொழில்நுட்பச் சேவை iiiஆம் தரப் பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**06. மொழி மூலம்**

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலத்தில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

07. விண்ணப்பப் படிவம்:

(அ) இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 அளவிலான (செ.மீ. 21x30) தாளின் இரு பக்கத்தையும் உபயோகித்து விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்புகள் 01 முதல் 03 வரையில் முதலாம் பக்கத்திலும் 04 முதல் 07 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதியை ஏனைய பக்கங்களிலும் வருமாறு விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய தகவல்களை தங்கள் கையெழுத்திலேயே தெளிவாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஆ) பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2021……….ஆம் திகதி அல்லது அதற்கு முன் "செயலாளர், வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மாவட்டச் செயலக வளவு, அநுராதபுரம்" எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணபத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வடமத்திய மாகாணத்தின் அரசாங்க சேவையின் ………………….. (பதவியின் பெயர்) பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2021" (நிரந்தர வதிவிட மாவட்டத்தைக் குறிப்பிடவும்) எனக் குறிப்பிடுதல் வேண்டும். (விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமானதாகும்.)

(இ) தாம் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.

(ஈ) தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய திணைக்களத்தின் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத, மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகவல்லாத மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் தினத்திற்குப் பின்னர் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை உள்ளடக்கிய விண்ணப்பங்கள், வடமத்திய மாகாண பிரதேச செயலகங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் (வடமத்திய மாகாணத்தினுள் வகிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) பணம் செலுத்திய பற்றுச்சீட்டை ஒட்டியிருக்காத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்து போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவம் தொடர்பில் இந்த ஆணைக்குழு பொறுப்புக்கூற மாட்டாது. விண்ணப்பப் படிவம் கிடைக்கப்பெற்றமை அல்லது நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையெழுத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிஸ், முப்படையில் அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிக்கும் வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**08. பரீட்சைக் கட்டணம்:**

(அ) இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களினாலும் பரீட்சைக் கட்டணமாக 600.00 ரூபாவை 2003-02-13 எனும் மாகாண சபை பொது வைப்புக் கணக்கிற்கு வரவு வைத்து வழங்கப்படும் (NC 100 மாதிரிப் படிவத்தின் ஊடாக) வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமானதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வகையில் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதமான விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் இந்தப் பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் வேறொரு பரீட்சைக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. வெளி மாவட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் செயலாளர், வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1472/99ஆம் இலக்க கணக்கிலக்கத்திற்கு இயைபுடைய பரீட்சைக் கட்டணத்தை ரொக்கப் பணமாக வைப்புச் செய்யலாம் என்பதுடன் பெற்றுக்கொள்ளப்படும் வைப்புச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக முத்திரைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் தபாலகங்கள் அல்லது உப தபாலகங்களுக்கு செலுத்தப்படும் பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஆ) இந்த அறிவித்தலில் 3.1 மற்றும் 3.2இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, உரிய பரீட்சைக் கட்டணங்களை குறித்த தினம் அல்லது அதற்கு முன் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகள் உண்டா எனப் பரீட்சித்துப் பார்க்கும் போது தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் அவ்வாறனவர்களின் பரீட்சை அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகர் பரீட்சை மண்டபத்தினுள், பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது கையொப்பத்தை உறுதி செய்து கொண்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், அபேட்சகர் தாம் தோற்றும் அனைத்து பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திபடும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன்பொருட்டு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

பரீட்சை நடைபெறுவதற்கு உள்ள 07 நாட்களுக்கு முன் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்காவிட்டால் அபேட்சகர்கள் பின்வரும் விபரங்கள் உட்பட வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்து மூலம் அல்லது தொலைபேசியில் அறிவித்தல் வேண்டும். (தொலைபேசி இல. 025-2222773, தொலைநகல் இல. 025-2224447)

**09. தெரிவு செய்யும் முறை:**

15/90ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்திற்கமைய அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற மாவடங்களில் நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்படுவர். இதன்பொருட்டு வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகள் முன்னுரிமை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப் பத்திரத்தின் பொருட்டும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளுக்கும் குறைவான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பதற்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டார்கள். ஒவ்வொரு வினாப் பத்திரத்தின் பொருட்டும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்கிடையே புள்ளித் திறமைகளின் பிரகாரம் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டு அதிகூடிய தகைமையைக் கொண்ட நபர்கள் வரிசைக் கிரமமாக தெரிவு செய்யப்படுவர்.

**குறிப்பு:** முன்னுரிமைப் பட்டியலைத் தயாரிக்கும் போது வடமத்திய மாகாணம் மற்றும் ஏனைய மாகாணத்திற்கு வெவ்வேறான பட்டியல் தயாரிக்கப்படும் என்பதுடன் வடமத்திய மாகாண முன்னுரிமைப் பட்டியலின் பிரகாரம் ஆகக் குறைந்த சித்தி புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின் ஏனைய தகைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

இந்தப் பதவிக்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாகவும் மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களில் மதிப்பெண்களின் திறமை வரிசைக் கிரமத்திற்கமைய ஆட்சேர்ப்பதற்கு உத்தேசித்துள்ள எண்ணிக்கைக்கு போதுமான எண்ணிக்கையானோரை பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகுதியானோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**10. பரீட்சை முறை**

போட்டிப் பரீட்சை பின்வரும் வகையில் எழுத்துமூலமான இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டது.

1. நுண்ணறிவுப் பரீட்சை – நேரம் ஒரு மணித்தியாலம் - 100 புள்ளிகள்
2. விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை – நேரம் 03 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்

**பாடப் பரப்பு**

**தொழில்நுட்பச் சேவையின் சகல பதவிகளுக்கான நுண்ணறிவுப் பரீட்சை**

அபேட்சகரின் சிந்திக்கும் தர்க்கத் திறன், பகுத்தறியும் ஆற்றல், நேர முகாமைத்துவம், நடுநிலை வகித்தல் போன்ற வினாக்களைக் கொண்டது. சகல பதவிகளின் பொருட்டும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சித்தியடைவதற்கு 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை**

(அ) தொழில்நுட்ப சேவை (சிவில்) தரம் iii / பயிலுநர் தரப் பதவிகளுக்கு

இங்கு சிவில் அதிகாரியொருவருக்கு இருக்கவேண்டிய அறிவைப் பரீட்சிப்பதற்கு கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரித்தல் வேலைகள், வீதிகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல், நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு தொடர்பான வினாக்களைக் கொண்டதாகும்.

(ஆ) தொழில்நுட்ப சேவை (சிவில்) தரம் iii / பயிலுநர் தரப் பதவிக்கு

இங்கு பதவிக்கு இயைபாக இருக்க வேண்டிய அறிவைப் பரீட்சித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டதாகும்.

**11. பொய்யான தகவல்களை வழங்குதல்:**

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாராவது அபேட்சகரொருவர் தகைமையற்றவர் என தெரியவரின் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படும். சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் அபேட்சகர் சமர்ப்பித்துள்ள ஏதாவது தகவல்கள் பொய்யானவை எனத் தெரியவரின் அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

12. பரீட்சை நடாத்தப்படும் தினம் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் வடமத்திய மாகாண ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள பொதுப் பரீட்சை சட்ட திட்டங்களுக்கமைய நடந்து கொள்ள கட்டுப்பட்டுள்ளனர். இந்தப் பரீட்சையை நடாத்துதல், நியமனம் வழங்குதல் மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் என்பவற்றை வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பில் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. ஆட்சேர்ப்பதற்கான நிபந்தனைகள் பதவிக்கு இயைபானவாறு வடமத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவை சட்டவாக்கத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்படும். இந்த அறிவித்தலின் மொழிகளுக்கிடையில் ஏதும் வேறுபாடுகள் காணப்பட்டால் அவ்வாறான வேளைகளில் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

**வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளை பிரகாரம்,**
**ஜேதானி திலக்கரத்ன,**
**செயலாளர்,**
**மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,**
**வடமத்திய மாகாணம்.**

2021-07-16